**தேதி :** 19.05.2026 SC.No. : 47/2021 **PW :2** சேகர்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவநாளன்று கீழப்பாவூர் பால்சொசைட்டியில் வேலையை முடித்து விட்டு நான் கருத்தலிங்கபுரம் சென்றேன். கருத்தலிங்கபுரத்திலிருந்து மயிலப்பபுரம் விலக்கு வந்து தான் தென்காசி மெயின்ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். மயிலப்பபுரம் விலக்கிற்கு எதிராக வடக்குபுறமாக உள்ள கீழப்பாவூர் விலக்கு வழியாக சென்றால் கீழப்பாவூர் சென்று விடலாம் என்றால் சரிதான். கீழப்பாவூர் விலக்கிலிருந்து மேற்கே 3 கி.மீ தொலைவில் தான் சம்பவம் நடந்த இடம் உள்ளது என்றால் சரிதான்.

அ.சா.1 ராமராஜன் எனக்கு நன்கு பழக்கமானவர். சம்பவம் நடந்த சமயத்தில் அருணாப்பேரி கோவில் திருவிழா நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. போன் மூலம் தீ எரிவதை பற்றி தகவல் தெரிவித்து விட்டு உடனடியாக நான் கிளம்பி விட்டேன் என்றால் சரிதான். இந்த விபரம் பற்றி ஏன் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் அ.சா.1 வந்து தகவல் தெரிவித்தார். அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதினால் அவர் கேட்டுக்கொண்டதினால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.05.22 16:31:53 +0530

**தேதி :** 19.05.2026 SC.No. : 47/2021 **PW :3 சீனி தர்மராஜ்**

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆலங்குளத்திலிருந்து மேற்குநோக்கி வரும் போது மயில்வண்ணநாதபுரத்திற்கு அடுத்து தான் கீழப்பாவூர் விலக்கு உள்ளது என்றால் சரிதான். கீழப்பாவூர் விலக்கு வழியாக வடக்கு பக்கம் போனால் கீழப்பாவூர் மைதானம் வரும் என்றால் சரிதான். கீழப்பாவூர் விலக்கிலிருந்து மேற்கே சுமார் ஒரு கி.மீ தொலைவில் அ.சா.1ன் கடை உள்ளது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் ஆலங்குளத்திற்கு யாரை பார்க்க சென்றேன் என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஈ.பி ஆபிசில் 24 மணிநேரமும் ஊழியர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் ஈ.பி ஊழியரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரியல்ல. நானும், ராமராஜாவும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர் எனக்கு தம்பி முறையாவார்.

போலீசார் விசாரணையில் "நானும், ராமகளஞ்சியம் என்பவரும் இருசக்கரவாகனத்தில் சொந்த வேலையாக ஆலங்குளத்திற்கு சென்று விட்டு, அதிகாலை 02.00 மணிக்கு அங்கிருந்து கிளம்பி திரும்ப ஊருக்கு வரும் போது சிவகாமியாபுரம் விலக்கிற்கு அருகில் இ.பி.ஆபிஸின் மேற்கு பக்கம் நாங்கள் வரும்போது அதிகாலை 02.30 மணியிருக்கும். ராமராஜா இடத்தில் சபாரி கார் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அங்கு 2, 3 பேர்கள் இருந்தார்கள். எங்களை கண்டதும் அங்கிருந்தவர்கள் இருசக்கரவாகனத்தை போட்டு விட்டு ஓடிவிட்டார்கள், இருட்டு நேரம்

என்பதினால் என்னால் யார் அந்த நபர்கள் என்று பார்க்க முடியவில்லை. " என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த ராமர்களஞ்சியம் மெக்கானிக் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய தம்பி என்பதினால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆலங்குளத்திலிருந்து கீழப்பாவூருக்கு வரும்போது சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்க மட்டும் தான் செய்தார்கள், எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதினால் அவர் கேட்டுக்கொண்டதினால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:32:00 +0530